## Way To Success & SMART Teachers Association - 10th Model Public Exam 2022-2023

### சமூக அறிவியல் - பிழைகளும் திருத்தங்களும்

1. வரைபட (Map) வினாவிற்கு இடங்களை தோராயமாக குறித்துக்காட்டக்கூடாது. கேட்கப்பட்ட இடங்களை மட்டும் தெளிவாக குறித்துக்காட்டினால் போதும். வரைபடத்தின் மேல் இடது புறத்தில் (Top left corner) வினா எண் (உள் வினா எண்ணோடு) கட்டாயம் எழுத வேண்டும். வரலாறு வரைபடத்தில் (History Map) பெரும்பாலும் இடங்கள் அல்லது நாடுகள் கேட்கப்படுவதால் துல்லியமாக புள்ளி வைத்து குறிக்க வேண்டும். தோராயமாக குறித்துக்காட்டக்கூடாது. "அல்லது / or" வினாக்களில் கேட்கப்படும் வரைபட வினாக்களை ஒரே வரைபடத்தில் (same map) கலந்து குறிப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.
2. புவியியல் வரைபடப்பகுதியில் (Geography map) இடங்களின் அமைப்பிற்கு ஏற்ப குறிப்பது சிறப்பு. வரையும் போது பென்சில் (pencil) கொண்டு வரைய வேண்டும்.
3. காலக்கோட்டில் (timeline) நிகழ்வு, வருடம் (event & year) ஆகிய இரண்டையும் எழுத வேண்டும். இவ்வினாவில் கேட்கப்பட்ட வருடத்தை மட்டும் குறித்துக் காட்ட வேண்டும். கூடுதலாக ஏதும் எழுத வேண்டாம். அலகு திட்டம் (scale) எழுத வேண்டும்.
4. பொருத்துக வினாவிற்கு விடைத்தெரிவை(option) எழுதாமல் வினாவை மாற்றி விடையளிப்பதை தவிர்க்க வேண்டும்.
5. வினாவில் என்ன கேட்கப்பட்டுள்ளது என தெளிவாக படித்து முழுமையாக விடையளிக்கவேண்டும். உதாரணமாக, (i) "Fundamental duties / குடிமகனின் அடிப்படை கடமை" என்ற வினாவிற்கு "Fundamental Rights / அடிப்படை உரிமைகள்"-ஐ பதிலாக எழுதியுள்ளனர். (ii) தமிழ்நாடு வேளாண் பருவம் பற்றிய வினாவிற்கு/ இந்திய வேளாண் பருவம் பதிலாக எழுதியுள்ளனர். (iii) GDP கணக்கிடும் முறை (Calculating GDP) பற்றிய கேள்விக்கு, கணக்கிடும் முறையை பற்றி எழுதமால் அதற்கான உதாரணத்தை மட்டும் எழுதியுள்ளனர். (iv) உயிர்க்கோள பெட்டகம் என்றால் என்ன? அமைந்துள்ள இடங்கள் எத்தனை என்ற வினாவிற்கு அதற்கான வரையறையை எழுதாமல் இடங்களை மட்டும் எழுதியுள்ளனர்.

### சமூக அறிவியல் - மெல்ல கற்கும் மாணவர்களுக்கான ஆலோசனைகள்

1. மாணவர்கள் முதலில் வினாத்தாள் அமைப்பை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.
2. பகுதி-1ல் (Part-I) கேட்கப்படும் 14 ஒரு மதிப்பெண் வினாக்களுக்கு புத்தக பயிற்சி வினாக்களை நன்கு படித்தால் 11 மதிப்பெண்கள் கண்டிப்பாக பெற இயலும்.
3. பகுதி-3ல் (Part-III) ஒரு 5 மதிப்பெண் வினா கோடிட்ட இடங்கள் ஆக கேட்க அதிக வாய்ப்புள்ளது. அதற்கு புத்தக பயிற்சி வினாக்களை படித்தாலே குறைந்தப்பட்சம் 3 மதிப்பெண்கள் பெறலாம்.
4. பகுதி-3ல் (Part-III) வேறுபாடுகள் (Differentiate) வினாக்களை படித்தால் 2 மதிப்பெண் கண்டிப்பாக உண்டு. **உதாரணமாக:** மேற்கு கடற்கரை சமவெளி & கிழக்கு கடற்கரை சமவெளி, புதுப்பிக்ககூடிய & புதுப்பிக்க இயலா வளங்கள், வானிலை & காலநிலை
5. பகுதி-3ல் (Part-III) காலக்கோடு (timeline) வினாவிற்கு 1900-1950 வரையிலான ஏதேனும் 11 நிகழ்வுகளை படித்தால் போதுமானது. ஐந்து மதிப்பெண் உறுதியாக பெறலாம்.
6. பகுதி-3 (Part-III) வரலாறு வரைபடத்தில் (History Map) உலகம் (World) (அ) இந்தியா (India) வரைபடம் கேட்கப்படலாம். **உலக வரைபடத்தில்** அச்சு & நேச நாடுகளின் (Axis & Allied Power Countries) இருப்பிடத்தை நன்கு பயிற்சி செய்தால் 4 மதிப்பெண் கண்டிப்பாக பெறலாம். இந்தியா வரைபடத்தில் பம்பாய் (Bombay), ஜான்சி (Jhansi), தண்டி (Dandi), மீரட் (Meerut), ஜாலியன்வாலாபாக் (Jallianwalabagh), டெல்லி (Delhi), மதராஸ் (Madras) & சௌரிசௌரா (Chauri Chaura) ஆகிய இடங்களை படித்தாலே 4 மதிப்பெண் பெறலாம்.
7. பகுதி-4 (Part-IV) புவியியல் வரைபடத்தில்(Geography Map) தமிழக வரைபடத்தை(Tamil Nadu map) தவிர்த்து, இந்திய வரைபடத்தை படிப்பது நலம். ஏனெனில் இந்திய வரைபடத்தை தோராயமாக குறிப்பது எளிது. இந்திய வரைபடத்தில் மலைகள்(Mountains), சிகரங்கள்(Peaks), தீவுகள்(Islands), வளைகுடா(Gulfs), துறைமுகம் (ports), ஆறுகள்(Rivers), சமவெளி(Plains), வேளாண் பயிர்கள்(Agriculture crops), மக்களடர்த்தி(Population Density), கல்வியறிவு விகிதம் (Literacy Rate), பீடபூமிகள்(Plateau) & பருவக்காற்றும் வீசும் திசைகள்(Direction of Monsoon winds) போன்றவற்றை நன்கு பயிற்சி செய்தால் 5-7 மதிப்பெண்கள் வரை பெறலாம்.

**கீழ்க்கண்ட வரிசையில் பயிற்சி வழங்குதல் நல்லது**

| | |
|---|---|
| 1 Mark | 8 - 11 marks |
| Fill up (கோடிட்ட இடங்கள்) | 4 - 5 marks |
| Timeline (காலக்கோடு) | 5 marks |
| History Map(வரலாறு) | 3 - 4 marks |
| Geography map(புவியியல்) | 4 - 7 marks |
| Differentiate, Give reason (வேறுபாடுகள், காரணம் கூறுக) | 2 marks |
| 2 Mark | 10 marks |
| **Total (மொத்தம்)** | **36-44** marks |

(எளிதில் இந்த மதிப்பெண்களை பெறலாம்)

**Time Line - Indian Events (காலக்கோடு – இந்திய நிகழ்வுகள்)**

- **1905 - Swadeshi Movement(சுதேசி இயக்கம்)**
- **1916 - Home rule League(தன்னாட்சி இயக்கம்)**
- **1917 - Champaran Satyagraha(சம்பரான் சத்தியாகிரகம்)**
- **1918 - The Kheda Satyagraha(கேதா சத்தியாகிரகம்)**
- **1920 - Khilafat Movement(கிலாபத் இயக்கம்)**
- **1922 - Chauri Chaura incident(சௌரி–சௌரா சம்பவம்)**
- **1930 - First Round Table Conference(முதல் வட்ட மேசை மாநாடு)**
- **1931 - Second Round Table Conference(இரண்டாவது வட்ட மேசை மாநாடு)**
- **1932 - Third Round Table Conference(மூன்றாவது வட்ட மேசை மாநாடு)**
- **1935 - The Government of India Act(இந்திய அரசு சட்டம்)**
- **1947 - India won Independence(இந்தியா விடுதலை பெறுதல்)**